மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை மின்சார சபை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 3409 - எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவரும் அமுலாக்கல் முகவருமாகும். மின்சார விநியோகம் மற்றும் விநியோக முறைமைகளின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கமாகக் காணப்படுகின்றது. செயற்திட்ட நடவடிக்கைகள் 4 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. குறிப்பாக (அ) சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவுகளில் கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகளை நிறுவுதல். (ஆ) நடுத்தர மின்னழுத்த வலையமைப்பின் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் (இ) நீடிக்கப்பட்ட கிராமப்புற மின்மயமாக்கல் வலையமைப்பு மற்றும் (ஈ) விநியோக செயற்திறன் கண்காணிப்பை மேம்படுத்தலும் பரிமாற்ற அமைப்பில் எதிர்வினைச் சக்தி நிர்வாகத்தை மேம்படுத்தல் என்பனவாகும். கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 23,069 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 160.20 மில்லியனானதுடன், அதில் ரூபா 16,560 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 115 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்படுகின்றது. மிகுதித் தொகையான ரூபா 6,508.80 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 45.2 மில்லியன் இலங்கை மின்சார சபையால் நிதியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்து 2021 செப்தம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியான அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தின் படி, அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர, இணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டம் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தொகை<br>ரூபா மில்லியன் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை மின்சாரசபையின் விருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 1-5 தொகுதியின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட இருப்புகள் நடைமுறைவேலையின் கீழ் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக செயற்திட்டத்தின் இருப்புப் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவு அல்லது மாகாணக் களஞ்சியங்களால் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு உறுதிசெய்யப்பட முடியாதிருந்தமையால் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்படவோ முடியாதிருந்தது. | 3,323.38 | கையிருப்பு மீதியின் மிகைக்கூறல் கள் | ரூபா 3,323.38 மில்லியன் தொகையான மீதிகள் (ரூபா 3,374.48 மில்லியன் 51.1 மில்லியன் கழித்ததை அடுத்து) இலங்கை மின்சார சபைக்கு மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 1,2,3,5 ஆம் தொகுதியினூடாக விநியோகிக்கப்பட்டிருந்தது. எஸ்ஈஎஸ்ஆர்ஐபீ யின் செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் படி, 1,2,3 மற்றும் 5 ஆம் தொகுதி நோக்கத்திற்காக இலங்கை மின்சாரசபையின் விருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பொருட்களை வழங்குவதாகும். விநியோகப் பிரிவு 02 இனால் தொகுதி 1,2 மற்றும் 3 செயற்படுத்தப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட வேளையில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் | செயற்திட்டத்துடன் தொடர்புடைய இருப்புகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உடன்பட்டவாறு இலங்கை மின்சார சபைக்காக மாகாண களஞ்சியங்களுக்கு பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ரூபா 3,374.48 மில்லியன் தொகையான இருப்புகளில் ஒப்பந்தக்காரர்களுக்கு உரித்தான ரூபா 51.1 மில்லியன் தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆகவே இருப்புகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 51.1 மில்லியன் தொகையால் மிகைப்படுத்திக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 51.1 | கையிருப்பு மீதியின் மிகைக்கூறல்கள் | எஸ்ஈஎஸ்ஆர்ஜபீ இன் தொகுதி 4 இன் கீழ் ரூபா 51.1 மில்லியன் பெறுமதியான இருப்புகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. தொகுதி 4 இன் நடைமுறை வேலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (இ) | முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் மெய்மையாய்வு செய்யப்படாத மீதிகளாக அறிக்கையிடப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ஏனைய பிரிவுகளுடன் தொடர்புபட்ட ரூபா 842.88 மில்லியன் கூட்டுமொத்தத்தொகையான நடைமுறை வேலை தெளிவான விளக்கங்கள் வழங்கப்படாது 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இருந்து விடுபட்டிருந்தன. | 842.88 | நடைமுறை வேலையில் விடுபடுதல்கள் | ஏனைய பிரிவிலான நடைமுறை வேலை மாகாண களஞ்சியங்களுக்கும் இலங்கை மின்சார சபை நடவடிக்கைகளி நிர்மாணிப்புகளுக்காக வழங்கப்பட்ட பொருட்களையும் குறித்திருந்தன. இலங்கை மின்சார சபை நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக பொருட்கள் வழங்கப்பட்டு கிடைக்கப்பெற்ற பொருட்கள் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன. | தற்போது மாகாணக் களஞ்சியங்களால் செயற்திட்டத்தினால் விநியோகிக்கப்பட்ட பொருட்கள் இனங்காணப்பட்டு உறுதிப்படுத்தப்பட முடியாமையால் செயற்திட்டத்தால் விநியோகிக்கப்படும் பொருட்களை இனங்காண்பதற்கு மாகாணக் களஞ்சியங்களில் வேறான பதிவேடுகளைப் பேணுவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டம் ஆரம்பித்ததில் இருந்து செயற்திட்டத்தால் பேணப்படும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 84.62 மில்லியன் பெறுமதியான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை மீதான விபரப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளான ரூபா 84.62 மில்லியன் கணக்காய்வின் போது | 84.62 | வியாபார மற்றும் ஏனைய கொடுக்க வேண்டிய பெறுமதிகளின் துல்லிய நிலை சந்தேகத்திற்கு இடமாகியிருந்தது. | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை | மீதிகளை மெய்மையாய்வு செய்வதற்காக முறையான புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | | |
| (உ) | ஓர் தனியார் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்தின் படி, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட வேண்டிய மீதியாக ரூபா 17.39 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் குறித்த கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 16.54 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. | 0.85 | செலுத்த வேண்டியவைகளின் குறைத்துக் கூறல் | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை | நிதிக் கூற்றுக்களில் உள்ளபடியான செலுத்தப்பட வேண்டிய மீதிகளை வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை மின்சார சபையின் பங்களிப்புடன் செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் கொடுப்பனவுப் பட்டோலைகள், உறுதிச்சீட்டுக்கள் மற்றும் நாட்குறிப்புப் பதிவுகள் போன்ற போதிய கணக்காய்வுச் சான்றுகள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | 290.69 | மேற்கொள்ளப்பட்டசெலவினத்தின் துல்லியத் தன்மை சந்தேகத்திற்குரிய நிலையில் காணப்பட்டது. | இலங்கை மின்சார சபையால் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் விபரம் இணைக்கப்பட்டுள்ளது. இணைப்பு 03. | செலவினங்களை செவ்வை பார்ப்பதற்கு முறையான புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் எல்கேஏஎஸ் 7 | காசுப் பாய்ச்சற்கூற்று தயாரிக்கையில் தொகுதி 7 இற்குரித்தான செயற்திட்ட வேலை ஆரம்பிப்பிற்கான முற்பணத்யையும் செயற்திட்ட அபிவிருத்திச் செலவினத்தையும் (டபிள்யூஜபீ) செயற்திட்டம் கருத்திற்கொண்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நிதி நிலைமை நடவடிக்கைகளின் முறையான தாக்கம் குறித்தும் அதன் காசு மற்றும் காசிற்குச் சமனானவற்றையும் . கண்டறியப்பட முடியாதிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி நிலைமைக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் முறையான கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் எல்கேஏஎஸ் 16 | 2002 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட டபிள்யூபீ ஜீபீ 9464 | ஆதன் இயந்திர உபகரணங்களின் குறைத்துக் கூறல்கள் | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி நிலைமைக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் முறையான கவனம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கத்தைக் கொண்ட கார் மற்றும் 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட டபிள்யூபீ பீஈ 5057 உள்ளடங்கலாக முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட வாகனங்கள் அச் சொத்துக்களின் பயன்படு பொருளாதார வாழ்வுக் காலம் மீள்பெறுமதியிடப்பட்டு அதன்படி கணக்கீடு செய்யப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. | | | செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 1646 | பிரமாணங்களின் படி சமர்ப்பிக்கப்பட வேண்டிய வாக ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன எரிபொருள் மற்றும் எண்ணெய் குறித்து செலவிடப்பட்டிருந்த ரூபா 1.3 மில்லியன் கணக்காய்வின் போது மெய்மையாய்வு செய்யப்பட முடியவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரமாணங்களுடன் இணங்கப்பட வேண்டும் |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 761 | இருப்புப் புத்தகங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாணக் களஞ்சியங்களில் இருப்புக்களாகப் பதிவுசெய்யப்பட்டிருந்த ரூபா 3,374.48 மில்லியன் கணக்காய்வின் போது மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை | பிரமாணங்களுடன் இணங்கப்பட வேண்டும். |
| (உ) | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சால் 2018 | முறையே ரூபா 23.4 மில்லியன் மற்றும் ரூபா 153.5 மில்லியன் கிரயமான ஒரு | செயற்திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் வாகனக் கொள்வனவின் தேவைப்பாடும் | கேள்வி 2018.02.15 அன்று விளம்பரப்படுத்தப் பட்டது. சக்தி மற்றும் வலு | பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சால் |

| | | | | |
|---|---|---|---|---|
| செப்தெம்பர் 18 ஆம் திகதி விநியோகிக்கப் பட்ட பீஈடீ 01/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஸ்போட் யுடிலிட்டி வாகனம் மற்றும் பதினாறு, நான்கு சக்கர (போர் வீல் டிரிவன்) டபிள் கப் உள்ளடங்கலாக பதினேழு மோட்டார் வாகனங்கள் 2019 திசெம்பர் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கொள்முதலின் போது சுற்றறிக்கைத் தேவைப்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்க வில்லை. செயற்திட்டங்களுக்கான வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுகையில் வாகனத்தின் சந்தை விலை கருத்திற்கொண்டு அனைத்து வரிகளையும் உள்ளடக்கிய விலை உச்சவரம்பு பொது முயற்சிகள் பணிப்பாளரால் தீர்மானிக்கப்பட்டிருக் கவில்லை. (செயற்திட்டத்தின் வாகனத் தேவைப்பாடுகள் குறித்த அரசுக்கு சொந்தமான நிறுவகங்களால் கலந்தாலோசித்து தெளிவாக அடையாளம் காணப்பட வேண்டும். (வாகனத் தேவைப்பாடு குறித்த அரசிற்குச் சொந்தமான நிறுவகங்களால் கலந்தாலோசிக்கப்பட்டு தெளிவாக அடையாளம் காணப்பட்டிருக்க வேண்டும்). மேலும், வாகனக் கொள்வனவிற்கான அங்கீகாரம் பொது முயற்சிகள் | செயற்திட்டத்தின் இலக்கை எய்துவதற்காக ஸ்போட் யுடிலிட்டி வாகனத்திற்காக ஏற்கப்பட்ட சிக்கனமற்ற கிரயமும். | அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதை அடுத்து கேள்வியின் நோக்கெல்லையில் வாகனத்தேவைப் பாடு உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2018 செப்தெம்பர் 18 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட பீஈடீ 01/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் படி இணங்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | திணைக்களத்திடம் இருந்து தலைவர் மற்றும் வரிசை அமைச்சுச் செயலாளரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. பீஈடீ 28 இன் 2005.01.31 | மீளாய்வாண்டின் போது வாடகைக் கட்டணங்களுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 27.04 மில்லியன் தொகை மற்றும் வாகன வாடகை தொடர்பாக தேவையான அங்கீகாரம் பெறப்பட முடியாதிருந்தது. | சிக்கனமற்ற செலவினம் | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் இணங்கப்பட வேண்டும். |
| (எ) | நிதி அமைச்சால் விநியோகிக்கப்பட்ட 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை – பந்தி 9 | வரிசை அமைச்சின் செயலாளரால் தலைமை தாங்கப்பட்டு திறைசேரிச் செயலாளரால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு அதிகாரி, தேசிய திட்டமிடல் மற்றும் வெளி வளத் துறைகள் திணைக்களத்திற்குரித்தான அமைச்சுச் செயலாளரால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு அதிகாரி, செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட ஓர் பிரதிநிதியைக் கொண்ட ஓர் வழிகாட்டல் குழு ஒன்று செயற்திட்டத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டு ஆகக் குறைந்தது இரண்டு மாதங்களிற்கு ஒரு முறையேனும் | செயற்திட்ட நடவடிக்கைகள் மீதான முகாமைத்துவக் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை போதாமை | ஓர் செயற்திட்ட வழிகாட்டல் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் இணங்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கூட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஏ) | 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய பீஎப்டீ/ஆர்ஈடீ/03/03/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் 3.1.7 மற்றும் 3.2.7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் | வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படாததுடன் குறித்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்குச் சொந்தமான சொத்துக்களின் உள்ளபடி நிலை மற்றும் அவற்றின் நிலை குறித்து கணக்காய்வின் போது மெய்மையாய்வு செய்யப்பட முடியாதிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் இணங்கப்பட வேண்டும். |
| (ஐ) | நிதிப் பிரமாணம் 507 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியத்தின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | களஞ்சியப் பொருட்களின் உள்ளபடி நிலை மற்றும் அவற்றின் நிலை குறித்து கணக்காய்வின் போது மெய்மையாய்வு செய்யப்பட முடியாதிருந்தது. | சீஈபீ இன் சகல களஞ்சியங்களுக்கான பௌதீக மெய்மையாய்வையும் சீஈபீ மேற்கொள்வதுடன் மெய்மையாய்வு அறிக்கைகள் தவறாமல் சமர்ப்பிக்கப்படுகின்றன. | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்கள் மற்றும் பௌதீக மெய்மையாய்வுகள் செயற்திட்டஇருப்புகள் மற்றும் சொத்துக்களை இனங்காணும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஒ) | நிதி அமைச்சுச் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட 2016 யூன் 10 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | செயற்திட்டத்திற்காக ஓர் உள்ளகக் கணக்காய்வாளர் ஆட்சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் செயற்பாடுகள் குறித்து சரியான கண்காணிப்பு வழிமுறைகள் மற்றும் தாமதமின்றி பொதுமக்களுக்கு எந்த அளவிற்கு நன்மை பயக்கும் என்பதைக் கண்டறிந்து செயற்திட்டத்தின் நிதி நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மையைச் சரிபார்க்க வேண்டும். | தற்போது செயற்திட்டத்தின் கணக்காய்வு இலங்கை மின்சார சபையின் உள்ளகக் கணக்காய்வுக் கிளையின் முன்னோட்டத்திற்குள் உள்ளதுடன் இலங்கை மின்சார சபையின் செயற்திட்டப் பிரிவிற்குச் சொந்தமான சகல செயற்திட்டத்தின் | செயற்திட்ட நடவடிக்கைகள் மீதான நெருங்கிய கண்காணிப்பு தேவைப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக ஓர் உள்ளகக் கணக்காய்வாளர் ஒதுக்கப்பட்டுள்ளார். |

3. **பௌதீகச் செயலாற்றல்**

3.1 **செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்ட நடவடிக்கைகள் பிரதான 04 கூறுகளைக் கொண்டு அமுலாக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. வடமாகாணத்தில் அமைந்துள்ள தீவுகளான நயினாதீவு, அனலைதீவு மற்றும் புங்குடுதீவு பகுதிகளில் நடுத்தர மின்னழுத்த வலையமைப்பின் நம்பகத்தன்மையின் மேம்படுத்துவதற்கு சூரிய சக்தி, ஆக்கபூர்வமான டீசல் மின்னாக்கிகள் மற்றும் பற்றரிகளை காற்றின் கலப்பு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைமையின் ஸ்தாபித்தல், கிராமிய மின்மயமாக்கல் வலைப்பின்னல் விரிவாக்கம் மற்றும் விநியோக செயலாற்றல் கண்காணிப்பின் முன்னேற்றம் மற்றும் பன்னிபிட்டிய மற்றும் பியகம பரிமாற்று முறைமை மின்நிலையத்தின் செயற்திட்டத்தின் முன்னேற்றங்கள் என்பனவாகும். எவ்வாறெனினும், குறித்த செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட 2016 யூலை 31 ஆம் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கும் மேலாக குறிப்பிடத்தக்க காலதாமதத்துடன் ஆரம்பிக்கபப்பட்டு தாமதத்தைப் பிடிப்பதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது செயற்பாடுகளைத் தொடர்ந்திருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கூறுகள் | கணக்காய்வு பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | தனிமைப்படுத்தப்பட்ட தீவுகளான நயினாதீவு, அனலைதீவு மற்றும் புங்குடுதீவு பகுதிகளில் மூன்று கலப்பின புதுப்பிக்கத்தக்கஆற்றல் குறும் பரிமாற்றங்கள் | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் படி, 2017 இன் 3 ஆம் காலாண்டளவில் வட மாகாணத்தின் தீவுகளான நயினாதீவு, அனலைதீவு மற்றும் புங்குடுதீவு பகுதிகளில் கலப்பு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2017 இன் 4 ஆம் காலாண்டளவில் ஒப்பந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இதற்கான வரைவு ஏல ஆவணங்கள் 2017 யூலை 4 ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் | செயற்திட்டக் காலப்பகுதி நீடிக்கப்படுவதற்கான இயலுமை உள்ளதுடன் இதனால் இத்துடன் தொடர்புபட்ட கியரங்களும் அதிகரிக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. | அனலை தீவு மற்றும் புங்குடுதீவில் உள்ள இரு காணிகளும் அரசாங்கக் காணிகளானதுடன் இவை இச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. குறித்த பிரதேசச் செயலாளர் 2018 ஆம் ஆண்டின் போது இக் காணிகளைப் பயன்படுத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருந்தார். நயினாதீவில் உள்ள காணி தனியாரிற்குச் சொந்தமானதுடன் | காணிக் கையேற்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலும் தாமதிக்காது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 31 இல் உள்ளவாறும் ஒப்பந்தம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் கீழ் 3 காணிகள் கையேற்கப்படுவதற்காக அளவிடப்பட்டிருந்த போதிலும், 2020 யூன் 03 ஆம் திகதியான கணக்காய்வுத் திகதியன்றும் எவ்வித காணியும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | | இலங்கை மின்சார சபை இதனை 2020 யூலை 21 ஆம் திகதி கொள்வனவு செய்திருந்தது. | |
| (ஆ) | நடுத்தர மின்னழுத்த வலையமைப்பின் நம்பகத்தன்மையின் முன்னேற்றம் | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் படி, 2016 இன் 3 ஆம் காலாண்டளவில் யூஎஸ் டொலர் 34.99 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 270.5 கிமீ நீளமான 33 கிமீ டவர் லைன்கள் மற்றும் 13 எண்ணிக்கையான 33 கேவீ பரிமாற்றகங்கள் நிர்மாணிக்கப்படுவதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2017 இன் 4 ஆம் காலாண்டளவில் ஒப்பந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், கொள்முதல் நடைமுறைகளினால் இவ் ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு இரு ஆண்டுகளுக்கு மேல் கடந்திருந்தது. இறுதியாக ஒப்பந்தம் 2019 மே 30 ஆம் திகதி யூஎஸ் டொலர் 40.48 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டு இவ் ஒப்பந்தத்தின் அமுலாக்கற் திகதி 2019 யூலை 06 ஆகக் காணப்பட்டது. இக் கூறின் கீழ் கன்ரிகளின் நிர்மாணிப்பிற்காக 10 காணித்துண்டுகள் கையேற்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 3 ஆண்டுகளின் பின்னரும் எந்தவித காணியும் | செயற்திட்டக் காலப்பகுதி நீடிக்கப்படுவதற்கான இயலுமை உள்ளதுடன் இதனால் இத்துடன் தொடர்புபட்ட கியரங்களும் அதிகரிக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது | மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்திற்காக 2016 ஏப்ரல் மாதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வெளியிடப்பட்டிருந்த மீள்குடியேற்றத் திட்டத்தின் படி, ஆசிய அபிவிருத்தி வங்கி கையேற்கப்படும் காணிகளைப் பார்க்கிலும் தேவையான காணிகளைக் கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை வழங்குவதற்கு பரிந்துரை செய்திருந்தது. ஆகவே, காணி உரிமையாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படக் கூடியவகையிலான காணிகளை இனங்காண்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தகைய காணிகளின் உரிமையாளர்கள் மற்றும் உரித்துத் | வேலைகளை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்தக்காரர்களின் வேலைகளை கிட்டிய அளவில் கண்காணித்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கையேற்கப்பட்டிருக்கவில்லை. சகல 16 லைன் வழிகளிலும் அளவீட்டுப் பணிகள் நிறைவேறியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2020 யூன் 01 ஆம் திகதி வரையிலும் 12 லைன் வழிகளிற்கு மாத்திரமே குறித்த பிரதேச செயலகங்களில் இருந்து அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. | | தொடர்பான விபரங்கள் இனங்காணப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியால் வெளியிடப்பட்டிருந்த மீள்குடியேற்றத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், பல்வேறு காரணங்களால் செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட முன்னர் செயற்திட்டத்தின் திட்டமிடற் கட்டத்தில் இனங்காணப்பட்டிருந்த சில காணிகள் பல்வேறு காரணங்களிற்காக மாற்றப்பட வேண்டியிருந்தது. | |
| (இ) | கிராமப் புற மின்மயமாக்கல் மற்றும் விநியோகச் செயற்திறன் கண்காணிப்பு | 2016 திசெம்பர் 26 ஆம் திகதி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், இரு தனியார் கம்பனிகளால் 01 ஆம் 02 ஆம் தொகுதிகளின் கீழ் மின்கம்பங்கள் மற்றும் மானிப் பிணைப்பு வழங்கல் மற்றும் விநியோகிப்பில் தேவையற்ற தாமதம் அவதானிக்கப்பட்டது. இது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் இது சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் செயற்திட்ட உத்தியோகத்தர்களால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிராமை கண்டறியப்பட்டது. ஆகவே, ரூபா 19.5 மில்லியன் கூட்டுமொத்தத் தொகை ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகளின் ஏஐஐஐ ஆம் பிரிவின் 27.1 ஆம் சரத்தின் படி, தாமதத்திற்கான | ஒப்பந்தக்காரருக்கு அசாதாரணமான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. | - | ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து தாமதத்திற்கான தண்டப்பணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தண்டப்பணம் விதிக்கப்பட வேண்டியது மீளாய்வாண்என் போதும் கோரப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | பரிமாற்ற அமைப்பில் எதிர்வினை சக்தி மேலாண்மை | 100 எம்வீஏஆர் பீஎஸ்சீ இனை பன்னிபிட்டிய கிரிட் துணை நிலையத்திலும் ஸ்டரிக் வார் சிஸ்டம் (எஸ்வீஎஸ்) பியகம கிரிட் துணை நிலையத்திலும் ஸ்தாபிப்பதற்கு ரூபா 3,806 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 100 எம்வீஏஆர் பீஎஸ்சீ இனை பன்னிபிட்டிய கிரிட் துணை நிலைய ஸ்தாபிப்பிற்கான ஒப்பந்தம் 2019 மே 9 ஆம் திகதி யூஎஸ் டொலர் 1.5 மில்லியன், யூரோ 3.76 மில்லியன், ரூபா 166.05 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் செயற்திட்ட நடவடிக்கைகள் 2 ½ ஆண்டு தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்தது. மற்றைய ஒப்பந்தம் கணக்காய்வுத் திகதியான 2020 யூன் 1 ஆம் திகதியேனும் வழங்கப்படாதிருந்தது. | செயற்திட்டக் காலப்பகுதி நீடிக்கப்படுவதற் கான இயலுமை உள்ளதுடன் இதனால் இத்துடன் தொடர்புபட்ட கியரங்களும் அதிகரிக்கப்படுவ தற்கான வாய்ப்பு உள்ளது | எஸ்ஈஎஸ்ஆர்ஜபீ தொகுப்பு 7 தொகுதி ஏ1 இன் கீழ் பணிகள் நடைபெற்றுக்கொண் டிருப்பதுடன் கொகுதி 7 ஏ2 – (பியகம ஜீஎஸ் 100 எம்வீஏஆர் எஸ்வீஎஸ்) 2020.05.28 அன்று வழங்கப்பட்டிருந்தது . இது 2019 நான்காம் காலாண்டின் போது வழங்கப்பட வேண்டியதாகும். எனினும், சனாதிபதித் தேர்தல்களை அடுத்து அமைச்சுக்களில் மாற்றங்களால் நிர்வாகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டமையாலும் கொள்முதல் முறையீட்டு சபைக்கு முறையான முறையீடுகள் சாத்தியமற்றதாகக் காணப்பட்டன. கோவிட் 19 தொற்றின் மத்தியில் வழங்கலுக்கு முன்னைய கூட்டம் சூம் கூட்டங்கள் வாயிலாக நடைபெற்று 2020 மே 28 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்படக் கூடியதாக இருந்தது. | பணிகளை விரைவு படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்தக்காரர்க ளின் பணியை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். |

### 3.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள்

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்ட நிதி இலக்குகளின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 7,776 மில்லியனிற்குச் சமமான யூஎஸ் டொலர் 54 மில்லியனைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறு குறித்த இலக்கில் 43.42 சதவீதம் மாத்திரமே எய்தப்பட்டிருந்தது. | கடன் வழங்கும் நிறுவகத்தால் அர்ப்பணிப்புக் கட்டணமாக ரூபா 22.81 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருந்தது . செயற்திட்டத்தின் மிகுதி 3 ½ வருடங்களிற்குள் சகல ஒதுக்கீடுகளும் பயன்படுத்தப்பட முடியாது. | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்ட நிதி இலக்குகளை அடைவதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்ட நிதி இலக்குகள் இணங்கப்பட வேண்டும். |

### 3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 03 பாரிய கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகளின் மேற்பார்வையும் கண்காணிப்பும் மின்சார சபையின் 03 வெவ்வேறான பிராந்தியத் தலைவர்களின் முன்னோட்டத்தின் கீழ் காணப்பட்டது. | முறையான ஒருங்கிணைவு இல்லாததன் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகளின் கண்காணிப்பு மற்றும் அமுலாக்கலில் தாமதம் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை | கண்காணிப்பு மேற்பார்வை மீதான கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்தல் வேண்டும். |